மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே வேலூரில் இருக்கின்ற அந்தக் கோயில் புராதனம் வாய்ந்த தாகும். அது மத்திய அரசாங்கத்தினுடைய பாதுகாப்பிலே இருந்தாலும் கூட, அதனைப் புதுப்பித்து, அங்கே பக்தர்கள் சென்று தொழுகின்ற வகையிலே, மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்தாகிலும் அந்தப் பணிகளைச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது அந்தக் கோயில் ஒரு புராதனச் சின்னமாகக் கருதப்பட்டு, மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் கீழே இருந்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதைப் புதுப்பிக்கின்ற கருத்துருவோ அல்லது அதிலே ஒரு சிலையை வைத்து அதைக் கோயிலாக மாற்றும் திட்டமோ, எண்ணமோ நம்முடைய அரசுக்கு இல்லை. அதற்காகச் சிபாரிசு செய்கின்ற எண்ணமும் இல்லை.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இந்த ஆலயத்திலே சிலையை வைத்து வணங்க வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பி, ஒரு குழு அமைக்கப்பட்டு, மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் வேண்டுகோள் விடப்பட்டது. அது எந்த நிலையில் இன்றைக்கு இருக்கிறது? மேலும், அதைப் புதுப்பிப்பதற்கான செயற் குறிப்பு ஏதாகிலும் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, புராதனச் சின்னத்தைப் பாதுகாக்கலாமே தவிர, புதுப்பித்தால் அது புராதனச் சின்னமாக இராது.

கல்வராயன் மலைப்பகுதியில் கடுக்காய் எண்ணெய் தொழிற்சாலை.

* வினா எண் 60— திரு. சோ. கலிதீர்த்தான், திரு. க. ரங்கசாமி :—மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1980 ஜூலை 30]

(அ) கல்வராயன் மலைப்பகுதியில் அதிகமாக கிடைக்கும் கடுக்காய் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சோ. கலிதீர்த்தான் : பேரவைத் தலைவரவர்களே, கல்வராயன் மலைப்பகுதியில் அதிகமாகக் கடுக்காய் கொட்டை விளைகிறது. அதைத் தனியார்கள் வாங்கி, மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இங்கேயும் சில தொழிற்சாலை களுக்குப் பயன்படுத்துகிறார்கள். எனவே, அதுபற்றி நம்முடைய அரசாங்கம் பரிசீலனையில் எடுத்துக் கொள்ளுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இந்தப் பணியை வேளாண் தொழில் கழகம் மேற்கொள்ள ஏற்கனவே முயற்சி செய்தது. ஆனால் அதற்குப் பிறகு அதற்கு மலைவாழ் பழங்குடி மக்களுடைய துணைத் திட்டத்தின்கீழ் மானியம் கிடைக்காது. அப்படிக் கிடைக்காத சூழ்நிலையிலும் அதை ஆரம்பிக்க வேளாண் தொழில் கழகம் தயாரா என்று அரசு கேட்டதற்குப் பிறகு அதனுடைய நிர்வாகக் குழு அந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட்டது.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, கடுக்காய் உற்பத்தி எங்களுடைய மாவட்டத்தில் அதிகமாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக பழனிமலைப் பகுதியில் அதிக மான கடுக்காய் கிடைத்து தனியார் அதை மிகச் சீப்பாகக் கொள் முதல் செய்து எங்கேயோ கொண்டு செல்கிறார்கள். ஆகவே, இந்த மாதிரி தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இப்பொழுது உத்தேசம் இல்லை,